குழித்துறை மறைமாவட்டம்

அன்பியங்களின் தொடர்பிதழ்

# அடித்தளம்

மலர் : 21 ஏப்ரல் 2026 இதழ் : 4



## இணைவோம்

இறைவனோடு...
மனிதனோடு...
இயற்கையோடு...

# ஆசிரியர் குழு

அருள்பணி. M. ஆல்வின் விஜய்

வேதியர் M. பேபி கமலா

திரு. S. ஜாண் பெல்லார்மின்

திருமதி. T. ஷீலா

திருமதி. K. ரெத்தினபாய்

# உள்ளே →

- இயக்குநரிடமிருந்து...
- சிலுவை அன்பின் அடையாளம்

  அருள்பணி. பா. அனீஷ்
- மலேரியா காய்ச்சல்

  திருமதி. M. லில்லி ஜெனட் மேரி
- உயிர்ப்பும் உறவும்

  வேதியர். மா. பேபி கமலா
- இன்றைய பொழுதுகளும் வைகறைகளுமாய்

  திரு. N.K. ரெஞ்சித்
- சித்திரையே வருக

  திருமதி. T. ஷீலா
- தமிழ்நாட்டின் பாரம்பரிய கூத்து கலை

  திருமதி. M. மேரி லிசி
- இயற்கையோடு நான் பூமி தினம்

  அருள்பணி. M. ஆல்வின் விஜய்
- பட்டாம்பூச்சிகள்

  திருமதி. V.P. ஜோஸ்பின் விப்சி
- திருமண சம்மதம் உண்மையானதா? போலியானதா? என்பதை எவ்வாறு கண்டுகொள்வது

  அருள்முனைவர் ஆரோக்கிய ஜோஸ் DCL
- சட்டம் அறிவோம்

  அருள்முனைவர். ஆரோக்கிய ஷெல்லி றோஸ்
- விழுதுகள் (ஆலமரம்)

  திரு. K. ஆல்பின் ஜோஸ்
- புனித ஜார்ஜ்

  திரு. S. ஜாண் பெல்லார்மின்
- நலத்திட்டங்கள்

ஞாயிறு வழிபாடுத் தயாரிப்போம்

## இயக்குநரிடமிருந்து...



**இ**றைஇயேசுவில் அன்பார்ந்தவர்களே, அவமானத்தின் சின்னமான சிலுவையை அன்பின் சின்னமாக்கிய இறைமகனின் பாடுகளை நினைவில் நிறுத்திய நாம் அன்பால் உலகையும், உறவுகளையும் அணிசெய்து மீண்டும் புதுப்பொலிவும், புது ஆற்றலும் பெற்றவர்களாக வாழ வாழ்த்துகிறேன்.

**இ**யேசுவின் பாடுகள் எவ்வகைத் துன்பத்தையும் தாங்க நமக்கு கற்றுத்தருகிறது. துன்பத்தை அடைந்தால்தான் என்றும் அழியாத இன்பத்தைப் பெற முடியும் என்பதை இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா உணர்த்துகிறது. அன்பை விதைத்தவருக்கும் உடலிலும், உள்ளத்திலும் காயம். அன்பின் சிலுவையை ஏற்றுக்கொண்ட நாமும் தடைகளைத் தாண்டி தடம்பதித்து வாழ முயல்வோம்.

**இ**ம்மண்ணகத்தில் வாழும் வாழ்க்கை வரையறுக்கப்படலாம். ஆனால், நமது வாழ்வால் நாம் விட்டுச்சென்ற நினைவுகள் என்றும் வாழ்ந்து கொண்டேதான் இருக்கும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இறைமகன் இயேசு மனித மீட்புக்காக தன்னையே அர்ப்பணித்த வாழ்க்கை அனுபவங்கள்; இன்றுமட்டுமல்ல, மனித உயிரினம் இம்மண்ணில் வாழும் வரை நம்மில் வாழ்ந்து செயலாற்றிக்கொண்டே தான் இருக்கும்.

**ம**னிதன் தன் வாழ்வில் அனைத்து வளங்களையும் பெற இறைவன் தந்த வளம் இயற்கை. மனிதனுக்காகப் படைக்கப்பட்ட இயற்கை மனிதனாலே அழிந்து போகிறது. இது மனித குலத்தின்

அழிவு என்பதை உணர்ந்தவர்களாக இயற்கையைப் பாதுகாப்போம். நமது தலைமுறையினருக்கு பொருளீட்டுவதைவிட ஆரோக்கியமாக வாழ நிலத்தடி நீர், தூய்மையான காற்று, இயற்கை வளம் மிக்க நிலம் போன்றவற்றை அளிக்க மரம் நடுவோம்; சுற்றுச்சூழல் பாதுகாப்போம்.

**அ**ன்பை விதைத்து, அவமானத்தை ஏற்று, தன்னை ஈந்து, இன்னுயிரைத் தந்து அமைதியை நிலைநாட்டிய இறைமகனின் இயேசுவைப்போல இயற்கையை நேசித்து, அமைதியைப் பரப்பிய புனித அசிசியாரின் ஆண்டைக் கொண்டாடும் நாமும் நம் உள்ளங்களிலும், இல்லங்களிலும், அன்பியங்களிலும் அன்பையையும் அமைதியையும் விதைக்கும் மறுக்கிறிஸ்துக்களாக வாழ வாழ்த்துகிறேன்.

பணி தோழமையில்

அருட்பணி. M. ஆல்வின் விஜய்
இயக்குநர், அன்பியப் பணிக்குழு


**YOU TUBE**

https://www.youtube.com/@anbiyamkuzhithuraidiocese945

**Website**

bcckuzhithurai.com

**E-mail ID**

bcckuzhithurai@gmail.com

**Office No.**

**+91 7358947467**

1 வாரம்

# சிலுவை அன்பின் அடையாளம்

அருட்பணி. பா. அனீஷ்



கல்லறையின் கல் அகற்றப்பட்டிருந்தது;

இயேசு வெளியே வருவதற்கு அல்ல;

மாறாக சீடர்கள் உள்ளே செல்வதற்கு"

**- புனித அகஸ்தினார்**



**அ**ன்பார்ந்தவர்களே! உங்கள் அனைவருக்கும் மகிழ்வான உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துகள். ஆண்டவர் இறப்பை கடந்து உயிர்ப்பை நமக்கு எண்பித்துக் காட்டியுள்ளார். இயேசுவின் உயிர்ப்பு செய்தி நம் அனைவருக்கும் புது வாழ்வையும், புது பார்வையும், புது பாதையையும், புது நம்பிக்கையும் பெற்றுத்தரட்டும். இயேசுவின் உயிர்ப்பு மண்ணகம் கடந்து விண்ணக வாழ்வு ஒன்று நமக்கு உண்டு என்பதை வெளிப்படுத்துகிறது.

**க**டவுள் இந்த உலகின் மீது அன்பு கூர்ந்தார். எனவே, அந்த அன்பின் வெளிப்பாடாக தம் ஒரே மகனை இந்த உலகிற்கு அனுப்பினார். எளிமையாக, ஏழை மனிதராக சாதாரண மக்களோடு வாழ்ந்து எல்லாரையும் ஏற்றுக்கொண்டு அன்பு செய்தார். எனவே, அந்த மகனையே இவ்வுலகின் மீட்புக்காக கையளிக்க திருவுளமானார். (யோவா. 3 : 16) தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனேயே அழிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்புகூர்ந்தார். இந்த அன்பின் அடையாளமாகத்தான் சிலுவை சாவை ஏற்றுக்கொண்டார்.

**சி**லுவைச் சாவு என்பது யூதர்களுக்கு சாபத்தின் சாவாக இருந்தது. எனவே, சிலுவையில் அறையப்பட்ட மனிதர் சபிக்கப்பட்ட மனிதராகவேக் கருதப்பட்டார். ஆனால், இயேசுவின் சிலுவைச்சாவால் சிலுவை என்பது மீட்பின் சின்னமாக, அன்பின் அடையாளமாக உயர்த்தப்பட்டது. (1 கொரி. 1:18) **"சிலுவை பற்றிய செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால், மீட்பு பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை."** எனவே, சிலுவை நமக்கு மீட்பை அள்ளித் தருகிறது.

- கிறிஸ்துவின் அன்பை உணர்த்திச் செல்ல இவ்வுலகில் சிலுவையை தவிர வேறொன்று ஈடு இணை இல்லை என்கிறார் - **பேராயர் புல்டன் ஷீன்.**
- கிறிஸ்து நம்மீது கொண்டுள்ள ஆழமான அன்பை சிலுவை நமக்கு வெளிப்படுத்துகிறது.
- “கிறிஸ்துவின் அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்னவென்று உணர்ந்து அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெறுவீர்களாக" (எபே. 3 : 18 - 19).
- சிலுவையில் தொங்கிய இயேசு தனது அன்பை மன்னிப்பாக வெளிப்படுத்துகின்றார்.
- லூக். 23 : 34 "தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில், தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்கு தெரியவில்லை"

**சி**லுவைகள் இன்றி வாழ்வு இல்லை; சிலுவைகளை சுமக்காமல் நமது வாழ்வை கடத்திச் செல்ல இயலாது. கல்வாரி நாயகன் இயேசுவோடுச் சேர்ந்து சிலுவைகளை சுமக்க முன்வருவோம்.

சிலுவைகள் பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கும். ஆனால், அதனை சுமப்பது என்பது சிரமமானது பிறர் தோள் மீது தமது சிலுவைகளை சுமத்தாமல் தமது சிலுவைகளை தாமே சுமந்து செல்ல முயற்சிப்போம்.

"சில சிலுவைகளை நாம் சுமக்க முன்வரும்பொழுது சில உயிர்ப்புகளை நாம் பெற்றுக் கொள்கிறோம்".

(மத். 16 : 24) என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.

**சிந்தனைக்கு:**

1. எனது வாழ்வின் சிலுவைகளாக எதை நான் கருதுகிறேன்?
2. கிறிஸ்துவின் சிலுவை எனக்கு எதை வெளிப்படுத்துகிறது?
3. அன்றாட சிலுவைகளை சுமக்க நான் எடுக்கும் முயற்சிகள் என்னென்ன?



## மருத்துவ பக்கம்

# மலேரியா காய்ச்சல்

திருமதி M. லில்லி ஜெனட் மேரி
களப்பணியாளர்

**ம**லேரியா என்பது ஒட்டுண்ணியால் ஏற்படும் நோய் பாதிக்கப்பட்ட கொசுக்கள் கடிப்பதன் மூலம் உருவாகிறது. பிளாஸ்மோடியா எனும் ஒட்டுண்ணியால் உண்டாகிறது. இது பாதிக்கப்பட்ட பெண் அனோபிலிஸ் கொசுக்கள் கடிப்பதால் பரவுகிறது. இந்த மனிதர்களுக்குப் ஒட்டுண்ணிகள் கொசு கடித்தப்பிறகு கல்லீரலை தாக்கி பின் இரத்த சிவப்பணுக்களை அழித்து காய்ச்சல் ஏற்படுத்துகின்றன.

**நோய்க்கு காரணமான கிருமிகள் :**

பிளாஸ்மோடியம் பால்சிபாரம் மற்றும் பிளாஸ்மோடியம் வைவாக்.

**தொற்று காலம் :** 10 முதல் 15 நாட்களுக்கு பின்னர்.

**அறிகுறிகள்:** காய்ச்சல், வாந்தி, தலைவலி, சோர்வு, நடுக்கம் போன்றவைக் காணப்படும்.

**பாதிப்புகள் :** வலிப்பு, ஆழ்மயக்கம், உறுப்புகள் செயலிழப்பு, இரத்த சோகை, மூளை பாதிப்பு.

**நோய் கண்டறிதல்:** இரத்த பரிசோதனை, மலேரியா, ஆன்டிஜென் மூலம் கண்டறியலாம்.

**மூலிகை வைத்தியம்:** துளசி தேநீர், இஞ்சி டீ, மஞ்சள் கலந்த பால், வைட்டமின் சி, உணவுகள் போன்றவை; காய்ச்சலின் வீரியத்தை குறைக்க உதவுமே தவிர மலேரியாவை கட்டுப்படுத்தாது.

**மலேரியா பரவுவதற்கான முக்கிய காரணங்கள் :** பெண் அனோபிலிஸ் கொசு பாதிக்கப்பட்ட ஒருவரை கடித்த பிறகுஆரோக்கியமான நபரை கடிக்கும் போது ஒட்டுண்ணி பரவுகிறது.

**இரத்த மாற்றம்:** பாதிக்கப்பட்ட நபரின் இரத்தம் ஆரோக்கியமான வர்களுக்கு, ஏற்றப்படும் போது, பாதிப்பு ஏற்படுகிறது.

**பயன்படுத்தப்பட்ட ஊசிகள் :** கருவுற்ற தாய் மூலம் சிசுவுக்கு கர்ப்ப காலத்தில் அல்லது பிரசவத்தின்போது தாயிடம் இருந்து குழந்தைக்கு பரவலாம்.


**குறிப்பு :**

1. மலேரியா நபரால் பரவாது. கொசு கடிப்பதன் மூலம் மட்டுமே பரவும்.
2. மலேரியா நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை முறை மூலம் குணப்படுத்தக்கூடியது.
3. மலேரியா அறிகுறிகள் கண்டறிதல் உடனே மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவதன் மூலம் இறப்பைத் தவிர்க்கலாம்.

# உயிர்ப்பும் உறவும்

வேதியர். மா. பேபிகமலா

**"ஒரு நொடி உயிரு போய் உயிரு வந்துது". "இந்த நோயில நான் செத்துப் பிழைத்தேன்"** என்ற வார்த்தைகள் மனித உரையாடலில் மெய் சிலிர்க்க வைக்கும் சொற்கள். நரம்புகள், இரத்த நாளங்கள், திசுக்கள் என உடம்பையே அதிரச்செய்யும் சொற்கள் இவை. செத்தேன் என்றாலே இன்ப துன்பங்கள், ஆசா பாசங்கள், குடும்ப உறவுகள் என அனைத்தையும் இழந்த அனுபவம். செத்தேன் என்ற அனுபவத்தின்போது கண்முன் படமாகக் காண்பது தன் உறவுகளையே. இந்த உறவுகளுக்காக நான் உயிர் வாழ வேண்டும்; இன்னொரு வாழ்வு கிடைத்தால் மேன்மையோடு வாழ்வேன் என உயிர்ப்பில் சபதத்தோடு, பக்குவப்பட்டு எழும்புகிறான் மனிதன்.



**வி**தை வெடித்தால்தான் செடி விருட்சமாகி பலன்கொடுக்க முடியும். துன்பப்பட்டால்தான் இன்பத்தின் எல்கையை கண்டு அனுபவிக்க முடியும். தோல்விகளைச் சந்தித்து, வெற்றி பெற்றால்தான்... அது அசாதாரண, அளவிடமுடியாத வெற்றி பரிசுகளைக் குவிக்கும். ஆக. இறப்பு இல்லையேல் உயிர்ப்பு இல்லை; இழப்பு இல்லையேல் வாழ்வு இல்லை, வாழ்வு இல்லையேல் உறவும் இல்லை. விதைகள் மண்ணுக்குள் மட்கிவிடாமல், வாழ்வைத்தேடி மண்ணை பிழப்பதுபோல், உயிரினங்கள் வாழ்வைத்தேடி

கருவறைகளைக் கிழிப்பதுபோல், இறப்புகள் உயிர்ப்பின் மேன்மையைத்தேடி, துன்பங்கள், தோல்விகள், இழப்புகள் உறவைத் தேடுவதற்காக உயிர்ப்படைகிறது. உயிர்ப்படைந்தால் வெற்றி, இன்பம், உறவு அனைத்தும் கிடைத்துவிடும்; நிலைத்துவிடும்.

**இ**யேசு இறப்பை வென்றார். உலகின் உறவுகளுக்கெல்லாம் மீட்பர் ஆனார். இயேசுவின் இறப்பின்போது உடன் சீடர்கள், உற்றார், உறவினர்கள் கண்ணீர் மல்கப் பரிதவித்தார்கள். அப்போதுதான், இயேசு உயிர்வாழ்ந்தபோது அவர் காட்டிய அன்பு, உடனிருப்பை உறவினர்கள் உணர்ந்தார்கள்; நெருக்கத்தையும் நேசத்தையும் உணர்ந்தார்கள். இயேசுவின் உயிர்ப்பில்தான் அவர் செய்த அற்புதங்கள், அதிசயங்கள், ஆச்சர்யங்கள், அவரது போதனைகள் ஆன்றோர் சான்றோர் மத்தியில் வெளிப்படுத்தப்பட்டது; உலகளவில் உணர்த்தப்பட்டது. அதிர்ச்சியிலும் பீதியிலும் உறைந்துபோன மக்களை "உங்களுக்கு சமாதானம் உண்டாகுக" என ஆசி கூறி தனது உடனிருப்பை தோள்தட்டி உறவை வலுப்படுத்தினார் இயேசு கிறிஸ்து.

**வா**ழ்வில் தோல்வி இல்லையேல் வெற்றி இல்லை. இழப்பு இழந்துபோனவற்றை மீட்டல். உயிர்ப்பு - நலிந்துபோன உறவுகளுக்கு வலுவூட்டுதல். இழப்பில் அனைத்து உறவுகளையும் காணலாம். உயிர்ப்பில் அனைத்து உறவுகளோடும் உறவாடலாம். எனவே, அன்பிய இறைமக்களாகிய நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் இறந்து உயிர்க்கும் எண்ணத்துடன் உறவுகளின் மேன்மையை உணர்வோம்; உணர்ந்து செயல்படுவோம்.

**சிந்தனைகள்:**

1. உங்கள் வாழ்வில் நொடிப்பொழுது விபரீதம் என்ற அனுபவம் நிகழ்ந்ததுண்டா?
2. கணப்பொழுதில் கடவுளையும், கண்ணெதிரே இருக்கும் உறவுகளையும் நினைத்ததுண்டா?
3. இயேசுவின் இறப்பிலிருந்து வாழ்வு என்ற உயிர்ப்பு நம்மில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன?


## இளையோர் பக்கம்

# இன்றைய பொழுதுகளும் வைகறைகளுமாய்

N.K. ரெஞ்சித்



**இ**ளைஞர்கள் நாட்டின் வருங்கால தூண்கள்! எதிர்காலம்! போன்ற சொற்றொடர்கள் பல மேடைகளில் முழங்கக் கேட்டிருப்போம். ஆனால், நிகழ்காலமும் இளைஞர்கள்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. இந்தியாவில் வாழ்வோரின் சராசரி வயதை கணக்கிட்டால், இந்தியாவின் வயது 27-28 ஆக இருக்கும். அப்படியானால் இளைஞர்கள் நிகழ்காலம் தானே! அதிகார நிலைகளில், உள்ள இளையோர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அறிவது அவசியமாகிறது. இளைஞர்கள் அனைவரும் இணைந்துச் சிந்தித்தால், செயல்பட்டால் வளமான நலமான சமூகத்தை உருவாக்க முடியும். அதற்கு நல் ஆளுமையும், தலைமைத்துவமும் முக்கியமாகிறது.



**இ**ன்றைய வேகமான உலகில், இளைஞர்கள் சமூகத்தின் முதுகெலும்பாகத் திகழ்கின்றனர். அவர்கள் கொண்டுள்ள ஆற்றல், புதுமையான சிந்தனை மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தும் மனப்பாங்கு ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியமானதாகும். இளைஞர் தலைமையேற்பு என்பது வெறும் அதிகாரத்தைப் பெறுவது அல்ல. அது சமூகப் பொறுப்பை ஏற்கும் மனநிலையாகும். ஒரு உண்மையான தலைவர். தனக்கு மட்டுமல்லாமல், சமூகத்தின் நலனையும் கருத்தில்கொண்டுச் செயல்பட வேண்டும். அவர் நேர்மை, ஒழுக்கம், பொறுப்பு மற்றும் கருணை போன்ற பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். கொள்கை துடிப்பும், இலட்சியத்திற்காக தன்னை அர்ப்பணிப்பதும், செயல்பாடுகளில் நேர்மையும், துணிவும், முன்நின்று பயணிப்பதும், தன் குழுவை இலட்சியப் பாதையில் வழி நடத்துவதும், பிரச்சனைகள் வரும்போது அறிவியல் மனப்பான்மையோடு அணுகுவதும், நேர்நிலை மனநிலையோடு தீர்வு காண்பதும் நல்ல தலைமைக்குரிய பண்புகள் ஆகும்.

**இ**ளைஞர்கள் தலைமைத்திறனை வளர்க்கும் முக்கிய வழிகளில் ஒன்று கல்வி. கல்வி அவர்கள் அறிவை மட்டுமல்லாமல், சிந்தனை திறன், தீர்மான திறன், மற்றும் பிரச்சினைகளை சமாளிக்கும் திறனை வளர்க்கிறது. பள்ளி மற்றும் கல்லூரி நிலைகளில் மாணவர் சங்கங்கள், விவாதக் குழுக்கள், மற்றும் சமூக சேவை இயக்கங்கள் போன்றவற்றில் பங்கேற்பது தலைமைத் திறனை மேம்படுத்த உதவுகிறது.

மேலும், தொழில்நுட்பம் இளைஞர்களுக்கு ஒரு பெரிய வாய்ப்பாக

உள்ளது. சமூக ஊடகங்கள் மூலம் அவர்கள் தங்கள் கருத்துகளை உலகளாவிய அளவில் பகிர முடிகிறது. சமூக பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மாற்றத்திற்கான இயக்கங்களை உருவாக்கவும் இது உதவுகிறது. ஆனால், இதை பொறுப்புடன் பயன்படுத்துவது அவசியம்.

இளைஞர் தலைமையியல் என்பது தைரியம், பொறுப்புணர்வு மற்றும் தெளிவான இலக்கு ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகும் ஒரு முக்கிய திறனாகும். போப் பிரான்சிஸ் அவர்கள் உலக இளைஞர் தினம் 2016 நிகழ்வில் "முடிவெடுக்கப் பயப்படாதீர்கள்" என்றும், உலக இளைஞர் தினம் 2016 நிகழ்வில் "இளைஞர்கள் எதிர்காலம் மட்டுமல்ல அவர்கள் இன்றைய கடவுளின் பரிசு" என்றும் கூறியுள்ளார். இதன் மூலம் இளைஞர்கள் சமூகத்தில் முன்னேற்றத்தை உருவாக்கும் முக்கிய சக்தி என்றும், தங்கள் செயல்களில் பொறுப்புணர்வு கொண்டு முன்னேற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்துகிறார். மேலும், டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் "கனவு காணுங்கள்; அதை நனவாக்குங்கள்" என்று கூறுவது, தலைவர்களுக்கு தெளிவான பார்வை அவசியம் என்பதை எடுத்துக்காட்டுகிறது. அதேபோல், நெல்சன் மண்டேலா அவர்கள் "கல்வியே உலகத்தை மாற்றும் சக்தி" என்று கூறுவதன் மூலம், அறிவும் கல்வியும் தலைமை வளர்ச்சிக்கு அடித்தளமாக இருப்பதை உணர்த்துகிறார். இவ்வாறு தைரியம், கனவு மற்றும் கல்வி ஆகியவை ஒன்றிணைந்தால், இளைஞர்கள் சமூகத்தில் சிறந்த தலைவர்களாக உருவாக முடியும்.

ஒரு நல்ல தலைவராக உருவாக, இளைஞர்கள் சில முக்கியமான பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

- தெளிவான இலக்கு நிர்ணயம்
- சிறந்த தொடர்பு திறன்
- குழுவாகச் செயல்படும் மனப்பாங்கு
- நேர மேலாண்மை திறன்
- புதுமையான சிந்தனை இவை அனைத்தும் அவர்களை ஒரு திறமையான தலைவராக மாற்றும்.



மேலும், சமூக பணிகளில் ஈடுபடுவது இளைஞர்களுக்கு மிகுந்த அனுபவத்தை அளிக்கிறது. கிராமப்புற மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கல்வி, சேவை போன்ற துறைகளில் அவர்கள் செயல்பட்டால், சமூகத்தின் உண்மை நிலையை புரிந்துகொண்டு அதற்கான தீர்வுகளை உருவாக்க முடியும். இளைஞர் தலைமையேற்பு ஒரு தனிப்பட்ட வளர்ச்சியாக மட்டும் அல்லாமல், சமூக மாற்றத்திற்கான சக்தியாகவும் அமைகிறது. இளைஞர்கள் தங்கள் ஆற்றலை நல்ல வழியில் பயன்படுத்தி, பொறுப்புடன் செயல்பட்டால், அவர்கள் ஒரு சிறந்த உலகை உருவாக்கும் தலைவர்களாக உயர முடியும்.



# சித்திரையே வருக

திருமதி. T . ஷீலா
களப்பணியாளர்



**த**மிழ் புத்தாண்டு தமிழர்களின் பாரம்பரியமான புத்தாண்டு கொண்டாட்டமாகும். இது தமிழர்களின் பண்பாடு, பாரம்பரியம், கலாச்சாரங்களை அடிப்படையாகக் கொண்டுக் கொண்டாடப்படுகிறது.

**இயற்கையும் தமிழ் பண்பாடும்:**



**த**மிழர் இயற்கையை உற்றுநோக்கி சூரியனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு புத்தாண்டு தொடக்கத்தை வரையறுத்தனர். சூரியன் மேஷ ராசிக்குள் பிரவேசிக்கும் காலமே சித்திரை முதல் நாளாக புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது. புத்தாண்டு கொண்டாட்டங்களில் இயற்கை பொருட்களுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. இளவேனில் காலத்தின் தொடக்கமான சித்திரை மாதத்தில் பூக்கள் பூத்து, மரங்கள் துளிர்விடும் வேளையில் புத்தாண்டு பிறக்கிறது.

**கனி காணுதல்:**

**மா**, பலா, வாழை ஆகிய முக்கனிகள், கொன்றை பூக்கள் மற்றும் காய் கனிகளை வைத்து இறைவனை வணங்குவது இயற்கையின் செழிப்பை வரவேற்பதைக் குறிக்கிறது.

**மா இலை தோரணம்:**

**வீ**டுகளின் வாசலில் மா இலை மற்றும் பூக்களால் தோரணம் கட்டி இயற்கையை வீட்டிற்குள் வரவேற்றனர்.

**வரலாற்றுப் பின்னணி:**

**த**மிழ் புத்தாண்டு மிகவும் பழமையானது. சங்க காலத்திலிருந்தே

தமிழர்கள் சித்திரை மாதத்தின் முதல் நாளினை புத்தாண்டாகக் கொண்டாடி வந்தார்கள். பின்னர் தமிழ் புத்தாண்டு சித்திரையில் தொடங்குவதா? அல்லது தை மாதத்தில் தொடங்குவதா? என்ற விவாதம் தமிழகத்தில் நீண்ட காலமாக இருந்து வந்தது.

**சித்திரை :** வானியல் ரீதியாக சூரியன் மேஷ ராசியில் உதிப்பதைக் கொண்டு சித்திரை முதல் நாளை புத்தாண்டு என பெரும்பாலானோர் பின்பற்றுகின்றனர்.

**தை :** 1921 இல் மறைமலை அடிகளார் போன்ற தமிழறிஞர்கள் "தை" முதல் நாளையே தமிழ் புத்தாண்டாகக் கருத வேண்டும் என்று முன்மொழிந்தனர். தமிழ்நாடு அரசு 2008ல் தை முதல் நாளை புத்தாண்டு தினம் என அறிவித்தாலும், பின்னர் 2011-ல் மீண்டும் சித்திரை முதல் நாளை அதிகாரப்பூர்வமாக புத்தாண்டாக மாற்றப்பட்டது.

**த**மிழ் மக்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் அடித்தளமாக திகழ்வது தமிழ் புத்தாண்டாகும். புதிய நம்பிக்கைகளுடனும் உற்சாகத்துடனும் கொண்டாடப்படும் ஒரு புனிதமான பண்டிகையாகும்.

**இ**ந்நாள் காலத்தின் மாற்றம் மட்டுமல்ல மக்களின் மனமாற்றத்திற்காகவும் புதிய இலக்குகளை நோக்கிய பயணமாகவும் அமைகிறது. உலக தொழில் மற்றும் வாழ்வாதாரம் பெருகி அனைவரும் ஒற்றுமையுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ இந்நாள் வழிகாட்டுகிறது.

# தமிழ்நாட்டின் பாரம்பரிய கூத்து கலை

திருமதி. M. மேரி லிசி
களப்பணியாளர்



**அறிமுகம்:**

**கூ**த்து என்பது தமிழ்நாட்டின் பழமையான நாட்டுப்புற கலை வடிவம் ஆகும். இது பாடல், நடனம், நாடகம் ஆகிய மூன்றையும் இணைக்கும் மக்களின் கலையாகும். கிராமங்களில் கோவில் திருவிழாக்கள், விழா காலங்கள் போன்ற நிகழ்வுகளில் கூத்து நடத்தப்படும். மக்களின் வாழ்வியல் புராணக் கதைகள், சமூக பிரச்சனைகள் ஆகியவை கூத்து மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.

**கூத்தின் வரலாறு :**



**கூ**த்து கலைக்கு சங்ககால வரலாறு உண்டு. அக்கால இலக்கியங்களில் கூத்து குறித்த குறிப்புகள் காணப்படுகின்றன. பின்னர், இது கிராமங்களில் வளர்ச்சி பெற்று மக்களின் பொழுதுபோக்கு மற்றும் அறிவூட்டும் கலையாக மாறியது.

**கூத்தின் வகைகள் :**

**த**மிழகத்தில் பல்வேறு கூத்தின் வகைகள் உள்ளன. தெருக்கூத்து தெருக்களில் நடத்தப்படும் மிகவும் பிரபலமான கூத்து: கட்டைக்கூத்து முகமூடி, வண்ண ஆடைகள், சிறப்பு அலங்காரங்களுடன் நடத்தப்படும். வில்லுப்பாட்டு வில் இசைக்கருவியுடன் பாடி கதை சொல்லும் கலை. பொம்மலாட்டம் பொம்மைகளை இயக்கி கதை சொல்லும் நாடக வடிவம்.

**கூத்தின் சிறப்பம்சங்கள் :**

**உ**ரத்த குரலில் பாடல் பாடும் வண்ணமயமான உடைகள் மற்றும் முக அலங்காரமும் தாளக் கருவிகளின் பயன்பாடு மிருதங்கம், தவில் போன்றவை பார்வையாளர்களுடன் நேரடி தொடர்பு சமூகத்தில் கூத்தின் பங்கு கூத்து வெறும் பொழுதுபோக்கல்ல. அது மக்களுக்கு கல்வி அளிக்கும் கருவியாகவும் செயல்படுகிறது. தர்மம், நீதி, வீரம் போன்ற நல்லொழுக்கங்களை மக்களிடம் விதைக்கிறது. சமூக விழிப்புணர்வு செய்திகளையும் பரப்புகிறது.

**முடிவுரை:** கூத்து கலை தமிழ் மக்களின் அடையாளமாகவும் விளங்குகிறது. இக்கலையை பாதுகாத்து வளர்த்தால் நம் பாரம்பரியமும் பண்பாடும் நிலைத்திருக்க முடியும். இன்றைய தலைமுறையும் கூத்துக் கலையை கற்று பரப்ப வேண்டும் என்பது அவசியமாகிறது.



4 வாரம்

# இயற்கையோடு நான்

# பூமி தினம்

அருள்பணி. M. ஆல்வின் விஜய்



**ஆ**ண்டுகள் பல கழிந்தும் அழியாத நினைவுகள், அவை வளரும் தலைமுறையினரின் வாழ்க்கையைப் பண்படுத்தும் படிநிலைகளாக, அனுபவ வழிகாட்டியாக வாழ்வோடு கலத்திருக்கின்றன. அவற்றில் அவற்றில் மகிழ்ச்சிக்குரியவை என்றும் அழியாத காவியங்களாகவும் கொண்டாட்டங்களாகவும் வெளிப் படுகிறது.



**இ**றைவனின் படைப்பில் வெற்றிடமாக இருந்த பூமியை, ஐவகை நிலங்களால் வரையறுத்து, ஐம்பூதங்களை நிலைப்படுத்தி, ஊர்வன, பறப்பன என்று உயிரினங்களால் மெருகூட்டி, கண்கள் கவரும் வகையில் அழகுற தந்த இந்த உலகை ஆண்டனுபவிக்க மனிதனைப் படைத்தார்.

**வ**ற்றாத நீர், செழிப்பான நிலம், தூய்மையான காற்று, அழகான ஆகாயம், கோடையிலும் குளிர்காற்றால் அரவணைக்கும் இதமான நெருப்பு என்றிருந்த அழகிய காலநிலையைக் கொண்ட காலம் அது. ஆனால், இன்று காடுகளை அழித்து பெருகிவரும் அடுக்குமாடிக் கட்டிடங்களாலும், மேம்படுத்தப்படாத தொழிற்சாலைக் கழிவுகளாலும், நெகிழிப் பைகளின் அபரீதப் பயன்பாட்டாலும், அழிந்து கொண்டிருப்பதை அறியாமலேயே வாழ்ந்து வருகிறோம்.

இயற்கையின் அழிவு நம் வாழ்வின் அழிவு என்பதை மறந்து

வாழ்கிறோம் என்பதே உண்மை. இவ்வாறான அழிவுகளைத் தடுக்கவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தவும், புவி வெப்பமடைதல், மாசுபாடு மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 22 அன்று பூமி தினம் (Earth Day) உலகளவில் கொண்டாடப்படுகிறது. பூமி தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடுதல், சுத்தம் செய்தல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பூ**மி தினம் முதன்முதலில் 1970 ஆம் ஆண்டு பின்பற்றப்பட்டது. அந்த காலகட்டத்தில் கலிபோர்னியாவில் ஏற்பட்ட ஒரு பெரிய எண்ணெய் கசிவின் அழிவுகளை பார்த்த, விஸ்கான்சினின் செனட்டர் கெய்லார்ட் நெல்சன் என்பவர் சுற்றுசூழலைப் பாதுகாக்க கல்வி மற்றும் செயல்பாட்டிற்காக ஒரு நாளை உருவாக்க கற்பனை செய்தார். சமூக ஆர்வலர் டெனிஸ் ஹேஸுடன் இணைந்து, நெல்சன் அமெரிக்கா முழுவதும் பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்ய உதவினார். சுத்தமான காற்று, நீர் மற்றும் ஆரோக்கியமான சூழலைக் கோரி 20 மில்லியனுக்கும் அதிகமான அமெரிக்கர்கள் அந்த முதல் பூமி தினத்தில் பங்கேற்றனர். அதனால் கெய்லார்ட் நெல்சன் பூமி தினத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். பூமி தினத்தின் வெற்றி, அமெரிக்காவில் சுத்தமான காற்றுச் சட்டம், சுத்தமான நீர் சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனம் (EPA) உருவாக்கம் போன்ற பல முக்கிய சட்டங்களை இயற்றுவதற்கு நேரடியாக வழிவகுத்தது.

**பூ**மி தினம் என்பது வெறும் கொண்டாட்டம் மட்டுமல்ல. அது மக்கள் எடுக்க வேண்டிய ஒரு உறுதிமொழி, இந்த நாளில் உலகம்

முழுவதும் மரம் நடும் இயக்கங்கள், தூய்மைப்படுத்தும் பிரச்சாரங்கள். காலநிலை அணிவகுப்புகள், கல்வி கருத்தரங்குகள் மற்றும் பெருநிறுவன மற்றும் சமூக மட்டங்களில் சூழல் நட்பு முயற்சிகள் ஆகியவை செய்யப்படுகின்றன. தற்போது டிஜிட்டல் செயல்பாடும் அதிகரித்துள்ளது. இது மக்களை வெபினார்கள், சமூக ஊடக பிரச்சாரங்கள் மற்றும் உறுதிமொழிகள் மூலம் ஆன்லைனில் பங்கேற்க அனுமதிக்கிறது.

**பூமி தினத்தின் முக்கியத்துவம்**

1. அனைத்து உயிரினங்களும் உயிர்வாழ சுற்றுச்சூழல் பாதுகாப்பு மிகவும் முக்கியமான ஒன்று.
2. சுற்றுச்சூழல் அமைப்பைப் பொறுத்தே மனிதன் உடல், உள நலமோடும், வளமோடும் இப்புவியில் வாழ இயலும்.
3. இயற்கை அழிந்து வருவதால்தான் காலநிலை மாற்றம் ஏற்பட்டு பேரிடர் கால அழிவுகள் ஏற்படுகிறது. மரங்களை நட்டு வளர்ப்பதாலும், காடுகளை பாதுகாப்பதாலும் மண் அரிப்பைத் தடுத்து, பேரிடரிலிருந்து பாதுகாக்கலாம். மேலும், காற்று மாசுபாட்டைத் தவிர்க்கலாம்.
4. நாகரீகக் கொண்டாட்டம் என்ற பெயரில் நெகிழிப் பைகளின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. இதனால் மண்வளம் குறைகிறது.
5. மரங்களை அழித்து கட்டிடங்கள் கட்டி செயற்கை மரங்களை அழகிற்காக பதிக்கும் நிலை உருவாகிறது. மரங்களை அழிப்பதால் மழை இல்லாத நிலை உருவாகி நிலத்தடி நீர் பற்றாக்குறை ஏற்படுகிறது.
6. மண்ணில் மட்காத நெகிழிப் பைகளை எரிப்பதால் காற்று மாசுமாடு அடைகிறது.

**பூமியைப் பாதுகாக்க நமது கடமைகள்**

1. பூமியைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
2. காற்று மாசுபாட்டைக் குறைக்க மரங்களை நடுதல்.
3. செயற்கையை துறந்து இயற்கை வளங்களைப் பேணுதல்.
4. சூரிய சக்தி, காற்று சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
5. நெகிழிப் பையை பயன்படுத்தாமல் துணிப்பையைப் பயன்படுத்துதல்
6. குப்பைகளை பிரித்தெடுத்து மேலாண்மை செய்வது.
7. மழைநீர் சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துதல்
8. செயற்கை உரங்களைத் தவிர்த்து இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல்.
9. வீட்டுக்கொரு மரம் நடுதல்
10. சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்திருத்தல்.
11. புனித அசிசியாரின் ஆண்டை முன்னிட்டு அன்பிய மக்களாகிய நாமும் புனித அசிசியாரைப் போல இயற்கையை நேசித்து, இப்புவியில் அமைதியை விதைப்போம்.

**சிந்தனைக்கு :**

1. நான் வாழும் பூமியைப் பாதுகாக்க நான் என்னென்ன முயற்சிகள் செய்துள்ளேன்?
2. வருங்கால தலைமுறையினருக்கு வளமான வாழ்வு வேண்டி இப்பூமியை எவ்வாறு பாதுகாக்கலாம்?

சிறார் பக்கம்

# பட்டாம்பூச்சிகள்

**திருமதி V.P. ஜோஸ்பின் விப்சி**

களப்பணியாளர்

**கு**ழந்தைகள் உலகின் மிக அழகான பரிசாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் சிரிப்பு, குறும்பு, சுறுசுறுப்பு ஆகியவை அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றன. அதனால்தான் குழந்தைகளை சிறார் பட்டாம்பூச்சிகள் என்று அழைக்கிறார்கள். பட்டாம்பூச்சிகள் மலரில் இருந்து மலருக்கு பறந்து செல்வதுபோல் குழந்தைகளும் எங்கும் ஓடி விளையாடி மகிழ்ச்சியை பரப்புகின்றன.



**சி**றார் மனம் மிகவும் தூய்மையானது. அவர்கள் மனதில் பொய், பொறாமை வெறுப்பு போன்ற எண்ணங்கள் இல்லை. எளிமையான விசயங்களிலும் அவர்கள் மகிழ்ச்சியை காண்கிறார்கள் பள்ளி வளாகத்தில பூங்காவில வீட்டின் முன்பாக அவர்கள் சிரித்துக் கொண்டு விளையாடும்போது அது பட்டாம்பூச்சிகள் பறப்பதைபோல் அழகாக இருக்கும்.

குழந்தைகள் நாட்டின் எதிர்காலம் அவர்களை நல்ல வழியில் வளர்த்து கல்வி, ஒழுக்கம், நல்ல பண்புகள் ஆகியவற்றை கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் எதிர்காலத்தில் நல்ல குடிமக்களாக உருவாக முடியம்.

எனவே, சிறார்களை அன்புடனும், கவனத்தோடும் வளர்த்தால் அவர்கள் பட்டாம்பூச்சிகளைப் போல உலகை அழகாக மாற்றுவார்கள்.

"மலர்களிடம் பறக்கும் பட்டாம்பூச்சி போல
மகிழ்ச்சியுடன் விளையாடும் சிறார் போல
சிரிப்பு மலரும் முகங்கள் எல்லாம்
சின்ன உலகின் இனிய மலர்கள்தான்
அன்பும் சிரிப்பும் நிறைந்த இதயம்
அதுவே சிறார்களின் அழகிய உலகம்".



# பங்களவில் புதிய நிர்வாகிகள்

## திரித்துவபுரம்

| கிறிஸ்துராஜபுரம் | |
|---|---|
| தலைவர் | திரு. ராஜேந்திரன் |
| செயலர் | திருமதி. சஞ்சு |
| பொருளர் | திருமதி. மேரி புஷ்பம் |
| து. தலைவர் | திரு. விமல்ராஜ் |
| து. செயலர் | திருமதி. தினிஷா |

| ஐக்கியநகர் | |
|---|---|
| தலைவர் | திரு. வினு |
| செயலர் | திருமதி. ஷைனி |
| பொருளர் | திருமதி. லீபா |
| து. செயலர் | திருமதி. சத்திய ஷொலி |

## முளகுமூடு

| விலவூர் | |
|---|---|
| தலைவர் | திருமதி. V. விஜயராணி |
| செயலர் | திருமதி. A. D. எமிமாள் கமலபாய் |
| பொருளர் | திருமதி. P.V. மேரி சௌதா |
| து. தலைவர் | திருமதி. T. ஷோபிகா |
| து. செயலர் | திருமதி. C. மேரி |

| குட்டைகாடு | |
|---|---|
| தலைவர் | திருமதி. Y. புஷ்ப லதா |
| செயலர் | திருமதி. வினோஷா |
| பொருளர் | திருமதி . ஷீபா |
| து. தலைவர் | திருமதி. C. சோனியா |
| து. செயலர் | திருமதி. R. சுகிதா |

# திருமண சம்மதம் உண்மையானதா? போலியானதா? என்பதை எவ்வாறு கண்டுகொள்வது?



அருள்முனைவர் ஆரோக்கிய ஜோஸ் DCL
நீதித்துறை ஆயர் பதில் குரு, பங்குப்பணியாளர், திக்குறிச்சி

மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் திருமணம் செய்து கொள்ளலாமா? அத்தகையத் திருமணம் செல்லத்தக்கதா? செல்லத்தகாததா? திருமண வாழ்வு ஒரு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நிகழும் நிலையான அன்பின் சங்கமம் ஆகும். இத்தகைய திருமண வாழ்வு சில வேளைகளில் கசந்து விடுவதை நாம் பார்க்கின்றோம். ஆள் பார்த்து, நாள் பார்த்து, நல்ல நேரம் பார்த்து, சீர்வரிசைகள் நிறைய செய்து நடத்தப்பட்ட திருமணங்கள் இடையிலே ஒன்றுமில்லாத நிலைக்குத் தள்ளப்படுவதை நாம் பார்த்திருக்கலாம். மன நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரை அதனைப்பற்றி சொல்லாமலேயே திருமணம் செய்துகொண்டால் சரியாகிவிடும் என்ற எண்ணத்தில் பலர் திருமணம் செய்துகொடுக்கின்றனர். இவ்வாறு நிகழ்த்தப்படுகின்ற திருமணத்தில் மனநோயால் பாதிக்கப்பட்டவர் கொடுக்கும் சம்மதம் உண்மையிலேயே முழுமையான சம்மதமாக இருக்குமா? என்ற கேள்விக்கு இலத்தீன் வழிபாட்டுமுறை கத்தோலிக்க திருஅவைச் சட்ட எண் 1095, பிரிவு 3 இவ்வாறு கூறுகிறது: உளவியல் காரணங்களால் திருமணத்தின் இன்றியமையாதக் கடமைகளை ஏற்க இயலாதவர்கள் உண்மையான



முழுமையான சம்மதம் அளிக்க முடியாது. இப்படிப்பட்ட ஒருவர் திருமணம் என்றால் என்ன என்பது பற்றியும், கணவன் மற்றும் மனைவியின் கடமைகள், உரிமைகள் என்பதைப்பற்றியும் போதிய அளவு அறிவு உடையவராயும், அதைப்பற்றியும் அறிந்திருக்கலாம். எனவே, அவர் திருமணம் செய்துகொள்ள தகுதியானவர் என முடிவுசெய்ய முடியாது. திருமணத்தின் இன்றியமையாதக் கடமைகளை ஏற்று நிறைவேற்ற ஆற்றல் இல்லாதவராக இருக்க ஒருவரின் மனநிலைப் பாதிப்பால் வரும் பாலியல் கோளாறுகள் காரணமாக இருக்கக்கூடும். இவர்களுக்குத் தேவை திருமணம் அல்ல. மாறாக மனநல மருத்துவரிடம் சிகிச்சை.

**ஏ**னென்றால், பாலியல் கோளாரால் பாதிக்கப்பட்டவர்கள் உளநோயால் பாதிக்கப்பட்டவர்கள். இப்படிப்பட்டவர்கள் திருமணம் செய்துகொண்டு பிறரின் வாழ்வை பாழாக்குவது இப்போது அதிகரித்துக்கொண்டே வருகின்றது. கத்தோலிக்கத் திருமண நீதிமன்றங்களே இதற்கு மிக முக்கியமான சாட்சியாகும். எனவே, இப்படிப்பட்டவர்களை திருமணம் செய்துகொண்டு துன்புறுகின்றவர்கள் அந்தந்த மறைமாவட்டத்தில் அமைந்துள்ள கத்தோலிக்கத் திருஅவை நீதி மன்றங்களை அணுகி நல்ல தீர்வை பெற முடியும். உளவியல் சார்ந்த காரணங்களால் ஏற்படுகின்ற பாலியல் கோளாறுகள் பின்வருமாறு:

- ஆண்களிடத்தில் காணப்படும் கட்டுக்கடங்காத காம வேட்கை (Satyriasis)
- பெண்களிடத்தில் காணப்படும் கட்டுக்கடங்காத காம வேட்கை (Nymphomania)

- ஆண்களிடத்தில் காணப்படும் (ஓரினி) தன்னினப் பாலுணர்வு (Homosexuality)
- பெண்களிடத்தில் காணப்படும் (ஓரின) தன்னினப் பாலுணர்வு (Lesbianism)
- துன்புறுத்தி இன்பம் அடைதல் (Sadism)
- துன்புற்று இன்பம் அடைதல் (Masochism)
- சிறுவர் மீது காம வேட்கை (Pedophilia)
- மிருகங்களைப் புணர்ந்து மகிழ்தல் (Bestiality)
- சடலத்துடன் புணர்தல் (Nacrophilia)
- பிற பாலின உடை அணிந்து மகிழ்தல் (Transvestism)
- பிற பாலினத்தவராக மாற விரும்புதல் (Transsexualism)

மேற்கண்ட பாலியல் கோளாறுகளினால் பாதிக்கப்பட்டவர்கள் நோயாளிகளாக கருதப்பட வேண்டும். திருமணத்தின் இன்றியமையாத கடமைகளைப் புரிந்து ஏற்று, அதை நிறைவேற்றும் ஆற்றல் உடையவர்கள் மட்டுமே திருமணம் செய்யும் தகுதியுடையவர்கள். திருமணத்தின்போது கொடுக்கப்படும் சம்மதம் மிகவும் முக்கியமானது. ஆனால், அதற்குப்பின் வாழும் திருமண வாழ்வும் முக்கியமானது எனவே, ஒரு நாளில் கொடுக்கப்படும் சம்மதத்தை விட வாழ்நாள் முழுவதும் அந்த சம்மதத்தின் அடிப்படையில் திருமணத்தின் இன்றியமையாதக் கடமைகளை ஏற்று அதனை நிறைவேற்றும் ஆற்றல் இல்லாதவர்கள் கத்தோலிக்கத் திருஅவையைப் பொறுத்தவரையில் திருமணம் செய்யும் தகுதியில்லாதவர்கள். எனவே, மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் திருமணம் செய்யாதிருப்பதே நல்லது.

# சட்டம் அறிவோம்

அருள்முனைவர் ஆரோக்கிய ஷெல்லி றோஸ்
MA.,LLB, DCL



**அ**ன்றாட வாழ்க்கைக்கும் தேவையான அடிப்படை சட்ட அறிவை பொதுமக்கள் பெறுவதற்கு இத்தொடர் உதவும். இன்று நிலம், சொத்து தொடர்பான உரிமைகளை உறுதிசெய்யும் ஆவணங்கள் குறித்து விவாதிப்போம். பொதுவாக நாம் நிலத்தைச் சுற்றி வேலி அமைத்தாலோ அல்லது சுவர் எழுப்பினாலோ நிலம் பாதுகாப்பாகி விட்டது என்று எண்ணுகின்றனர். ஆனால், வேலி அல்லது மதில் சுவர், உடைமை பயன்பாட்டுக்கான (Physical Possession) வெளிப்படையான குறியீடே தவிர, சட்டரீதியான பாதுகாப்பை (legal Protection) வழங்காது. உண்மையான பாதுகாப்பு, சட்டப்பூர்வ ஆவணங்களால் மட்டுமே கிடைக்கும்.

**கேள்வி:** சட்டப்படி நிலத்தை பாதுகாக்க அவசியமான முக்கிய ஆவணங்கள் எவை?

**பதில்:** ஒரு நிலத்தின் மீது உரிமையை உறுதிப்படுத்தவும். பாதுகாக்கவும் பொதுவாக கீழ்கண்ட ஆவணங்கள் முக்கியமாக இருக்க வேண்டும். அவை:

- மூலப் பத்திரம் (Parent/Orginal Deed),
- கிரையப் பத்திரம் (Sale Deed).
- பட்டா (Revenue Records / வருவாய் பதிவின் படி நிலம் யாருக்கு உரிமைப்பட்டது).
- சிட்டா (நிலத்தின் வகை மற்றும் தன்மை பற்றிய விவரம்),
- அபங்கள் (நிலத்தில் உள்ள பயிர் மற்றும் பயன்பாட்டு பற்றிய விவரம்.

- நில வரைபடம்/ FMB Sketch (Field Measurement Book Sketch).
- நிலவரி / கர ரசீது (Tax Receipt) முதலியன.



இவை அனைத்தும் உங்கள் சொத்திற்கு உள்ளதா என்று சரிபார்த்துக் கொள்ளவும். இவ்வாவணங்களை பெறுவது எப்படி என்பதை வரும் தொடரில் காண்போம்.



முதியோர் பக்கம்

## விழுதுகள் (ஆலமரம்)

**திரு. K. ஆல்பின் ஜோஸ்**
களப்பணியாளர்.

